நெமிலி ஊராட்சி ஒன்றியம், பள்ளூர் ஊராட்சி மன்ற தலைவர்
அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு.பிரதாப்

நாள் 25.06.2024

குடியிருப்பு மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ராணிப்பேட்டை – ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், நெமிலி ஊராட்சி ஒன்றியம், பள்ளூர் ஊராட்சி / கிராமம், புன்செய் சர்வே எண்கள் 684/2C2B, 678/2, 677/1B, 2B-ல் 1.20 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளித்தல் - தொடர்பாக.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம். ந.க.எண் RPT/RAFNEYRU/23044 வேலூர், நாள் : 02.04.2024
2. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் : 04.06.2004
3. நிலப்பயன் மாற்றக் கட்டணம் ரூ.19208/- செலுத்தியதற்கான வங்கி கணக்கு எண் பள்ளூர் நாள் :24.06.2024
4. ஆய்வுக் கட்டணம் மனை 1-க்கு 1000/- வீதம் ரூ.26,000/- செலுத்தியதற்கான வங்கி கணக்கு எண் பள்ளூர் நாள் : 24.06.2024
5. பள்ளூர் ஊராட்சி மன்ற தீர்மான எண் 27 நாள் :10.06.2024

உத்திரவு :

பார்வை (1)-ல் குறிப்பிட்டுள்ள சென்னை நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், அவர்களின் செயல்முறைகளின் நெமிலி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, பள்ளூர் ஊராட்சி கிராம புன்செய் சர்வே எண்கள். 684/2C2B, 678/2, 677/1B, 2B-ல் மனை எண்கள் : 1 முதல் 26 வரை ஆகியவைகள் 1.20 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள உத்தேச மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு வரன்முறைப்படுத்துதல் ம.வ/மா.ந.ஊ.(ரா.மா)எண்: 34/2024-ல் வரன்முறைப்படுத்தி, சாலை, பொது உபயோகம், மின்மாற்றி ஆகியவை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும், உத்தேச குடியிருப்பு புதிய மனைப்பிரிவில் உள்ள காலி இடத்தில் மின்சார டிரான்ஸ்பார்மருக்கு 17.20 சதுரடியில் அமைக்கவும் மற்றும் பொது உபயோகம், சாலைகள் ஆகியவற்றை பள்ளூர் ஊராட்சிக்கு தான பத்திர ஆவண எண் 717/2024, நாள்:25.03.2024 பள்ளூர் ஊராட்சி மன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

மேலும் நிலப்பயன் மாற்றக்கட்டணங்கள் பார்வை(3)-ல் குறிப்பிட்டுள்ளபடி உரிய தலைப்புகளில் செலுத்தி அதற்கான ரசீதுகள் சமர்ப்பிக்கப்பட்டது மற்றும் இதற்கான தீர்மான பள்ளூர் ஊராட்சி மன்றத்தால் நிறைவேற்றப்பட்டு தீர்மான எண் அளிக்கப்பட்டு இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சி மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

தலைவர்
பள்ளூர் ஊராட்சி மன்றம்
நெமிலி ஊராட்சி ஒன்றியம்

25.06.2024 வார்டு எண்.44, பள்ளூர்

பெறுநர் :
திருமதி.S.ரேவதி மற்றும் திரு.K.N.சுந்தர்,
எண்.40/1, மேலாண்டை தெரு,
பள்ளூர் கிராமம், அரக்கோணம் வட்டம்,
ராணிப்பேட்டை மாவட்டம் - 631051